# குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

# திருவாரூர்.

# CC No.25 /2020

2020-ம் ஆண்டு நவம்பர் மாதம் 19 -ம் நாள் குற்றமுறையீட்டாளர் / எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 6 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சக்திவேல் | வயது | |
| தகப்பனார் பெயர் | வெங்கடாசலம் | ஜாதி | |
| தொழில் | | மதம் | |
| ஊர் | | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் திருவாரூர் கோமல் வடக்கு தெருவில் வசித்து வந்து மெடிக்கல் ஷாப்பில் வேலை செய்து வருகிறேன். எனக்கு அ.சா.1 ஐ தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1 சுரேஷ் திருவாரூரில் உள்ள வேலுடையார் பள்ளியில் படிக்கும் அவரது குழந்தைகளை விடுவதற்காகவும், அழைத்து வருவதற்காகவும் அடிக்கடி அந்த பள்ளிக்கு வந்து செல்வார். அப்போது திருவாரூர் துர்க்காலயா ரோட்டில் இயற்கை அங்காடி வைத்திருக்கும் சக்திவேல் (1வது எதிரி) கடைக்கு அடிக்கடி சென்று வருவதால் அ.சா.1 க்கும், எதிரி சக்திவேலுக்கும் பழக்கம் ஏற்பட்டுள்ளது. அந்த பழக்கத்தின் அடிப்படையில் எதிரி சக்திவேல் அ.சா.1 சுரேஷிடம் திருத்துறைப்பூண்டி, திருவாரூர், மன்னார்குடி, கும்பகோணம், சென்னை ஆகிய ஊர்களில் உள்ள நீதிமன்றங்களில் அலுவலக உதவியாளர் பணி காலியாக இருப்பதாகவும் அதனை வாங்கி தருவதாகவும் அதற்கு இரண்டு லட்சம் செலவாகும் என்றும், ஒரு லட்சம் முன்பணம் கொடுக்க வேண்டும் என்றும் அப்பாயிண்ட்மெண்ட் வந்தவுடன் மீதி ஒரு லட்சம் தரவேண்டும் என்றும் கூறியுள்ளார். அ.சா.1 சுரேஷ் என்னிடம் மற்றும் அழகர், தாசன், தர்மராஜ், சுரேஷ், தினேஷ் ஆகியோர்களிடமும் கூறினார். அதனால் 13.02.2018 ம் தேதியன்று இரவு சுமார் 8.30 மணியளவில் நாங்கள் ஏழு பேரும் தலா ஒரு லட்சம் வீதம் பணத்தை ரெடி செய்துக்கொண்டு எதிரி சக்திவேல் வீட்டிற்கு போனோம். எதிரி சக்திவேலிடம் நாங்கள் அனைவரும் ஏழு லட்சம் பணம் மற்றும் எங்களது கல்வி சான்றின் நகல்கள், பயோடேட்டா, எம்ப்ளாயிமெண்ட் கார்டு நகல் ஆகியவற்றை கொடுத்தோம். அப்போது எதிரி சக்திவேல் எங்களிடம் ஒரு மாதத்திற்குள் வேலை வந்துவிடும் என்று சொன்னார். அதன்பிறகு அவர் சொன்னபடி வேலை எதுவும் வரவில்லை. அதனால் 28.04.2018 ம் தேதி அ.சா.1 சுரேஷ், நான், அழகர், தாசன் ஆகியோர் சென்று எதிரி சக்திவேலிடம் வேலை என்னாயிற்று என்று கேட்டோம். அப்போது எதிரி சக்திவேல் மே மாதம் கோர்ட் வெக்கேஷன் லீவு என்றும், ஒரு மாதம் கழித்து

வேலைக்கான ஆர்டர் வந்துவிடும் என்றும் சொன்னார். அதன்பிறகும் அவர் சொன்னபடி வேலை வரவில்லை என்பதால் ஒரு நாள் தேதி சரியாக ஞாபகம் இல்லை, நான், அ.சா.1 சுரேஷ், சுரேஷின் மனைவி, தாசன் ஆகியோர் சென்று எதிரி சக்திவேலிடம் மீண்டும் வேலையை பற்றி கேட்டோம். அப்போது எதிரி சக்திவேல் எங்களிடம் வாங்கிய பணத்தை திருவாரூர் கோர்ட்டில் வேலை செய்யும் கோவிந்தலெட்சுமி (எதிரி-2) என்பவரிடம் கொடுத்துள்ளதாகவும், அதனால் அவரிடமே போனில் பேசுங்கள் என்றும் சொல்லி எதிரி சக்திவேல் போனிலிருந்து போன் போட்டு கோவிந்தலெட்சுமியிடம் கொடுத்தார். போனில் கோவிந்தலெட்சுமி பேசினார். அவர் எங்களிடம் 28.02.2019 ம் தேதிக்குள் வேலைக்கான உத்தரவு வந்துவிடும் என்றும், அப்படி வேலை கிடைக்கவில்லை என்றால் 04.03.2019 ம் தேதிக்குள் எங்களிடம் வாங்கிய ஏழு லட்சம் பணத்தை திருப்பி கொடுத்துவிடுகிறேன் என்றும் பேசினார். அதன் பிறகு நாங்கள் அங்கிருந்து சென்றுவிட்டோம். எனக்கு டி.என்.சி.எஸ்.சி. -யில் வேலை கிடைத்துவிட்டது, அதனால் நான் அ.சா.1 சுரேஷிடம் சென்று என்னிடம் வாங்கிய பணத்தை திருப்பி வாங்கிகொடு என்று கேட்டேன். அவர் எதிரி சக்திவேலிடம் பணத்தை கேட்டதால் எதிரி சக்திவேல் 15 நாட்களில் பணத்தை திருப்பி கொடுத்துவிடுவதாக கூறி என்னிடம் வாங்கிய ஒரு லட்சம் பணத்தை திருப்பி கொடுத்துவிட்டார். நான் அந்த பணத்தை அ.சா.1 சுரேஷிடமிருந்து பெற்றுக்கொண்டுவிட்டேன். பிறகு அ.சா.1 சுரேஷிடம் கேட்டபோது வேலை கிடைக்கவில்லை என்றும், ஏமாந்துவிட்டதாகவும், பலநபர்களை எதிரி சக்திவேல் வேலை வாங்கி தருவதாக கூறி ஏமாற்றி விட்டதாகவும் கூறினார். பிறகு அ.சா.1 னிடம் கேட்டபோது வழக்கு போட்டுள்ளதாக கூறினார். அதில் என்னையும் சேர்த்து கூறியுள்ளதாக சொன்னார். போலிசார் இது சம்பந்தமாக என்னை விசாரணை செய்தார்கள். நடந்த விபரம் சொன்னேன்.

**குறுக்கு விசாரணை (1 வது எதிரி தரப்பில்)**

நான் வேலை பெறுவதற்காக அ.சா.1 சுரேஷிடம் தான் பணம் கொடுத்தேன் என்றால் இல்லை சுரேசை அழைத்து சென்று எதிரி சக்திவேலிடம் பணத்தை கொடுத்தேன். அப்போது சுரேஷின் மனைவி கூட இருந்தாரா என்றால் இருந்தார். சுரேஷ் மனைவி பெயர் என்ன என்றால் மாலதி ஆகும். கொடுத்த பணத்தை நான் சக்திவேலிடம் நேரடியாக வாங்கினேனா என்றால்இல்லை, எதிரி சக்திவேல் அ.சா.1 சுரேஷிடம் பணத்தை கொடுத்திருந்தார், நான் சுரேஷிடம் இருந்து என் பணத்தை பெற்றுக்கொண்டேன். சுரேஷ் என் வீட்டிற்கு வந்து பணத்தை கொடுத்தாரா, நான் சுரேஷ் வீட்டிற்கு சென்று பணத்தை பெற்றுக்கொண்டேனா என்றால் நான்தான் சுரேஷ் வீட்டிற்கு சென்று பணத்தை பெற்றுக்கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் போன் மூலம் விசாரித்தார்கள். போலிசார் என்னிடம் கையெழுத்து ஏதாவது வாங்கினார்களா என்றால் இல்லை. அ.சா.1 சுரேஷ் எதிரி சக்திவேலிடமிருந்து என் பணத்தை எப்படி வாங்கினார் என்றால் எதிரி சக்திவேல் அ.சா.1 சுரேஷ் வீட்டிற்கு வந்து பணத்தை கொடுத்திருந்தார். நான் எதிரி சக்திவேல் வீட்டிற்கு செல்லவில்லை என்றாலும், அ.சா.1 சுரேஷின் மனைவி 2 ம் எதிரி கோவிந்தலெட்சுமியிடமிருந்து என் பணத்தை பெற்று கொடுத்தார் என்றாலும் சரியல்ல. எதிரி சக்திவேல் என்னிடம் வேலை வாங்கி தருவதாக நேரடியாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரி சக்திவேல் என்னிடம் வேலை வாங்கி தருவாக அவர் வீட்டில் வைத்து நேரடியாக சொன்னார். முதலில் எனக்கு சக்திவேலை யார் என்று தெரியுமா என்றால்

தெரியாது. அவர் வீட்டிற்கு சென்ற பிறகுதான் பணம் கொடுக்கும்போது பார்த்தேன். அ.சா.1 சுரேஷ்தான் என்னிடம் தகவலை சொன்னார் என்றால் அவர் அடிக்கடி எதிரி சக்திவேலை பார்த்து விசாரித்து வந்துதான் என்னிடம் சொன்னார். எதிரி சக்திவேல் அ.சா.1 சுரேஷிடம் எதிரி கோவிந்தலெட்சுமியிடம் பேசுமாறு சொன்ன அன்று நான் எதிரி சக்திவேல் வீட்டிற்கு போயிருந்தேனா என்றால் இல்லை. அ.சா.1 சுரேஷ் என்னிடம் சொன்னார். பணம் கொடுக்கும்போது காண்பிரன்ஸ் கால் போட்டு பேசுவோமா என்றால் பணம் கொடுத்தபோது நேரில் சென்று கொடுத்தோம். வேலை பற்றி விசாரிக்கும்போது அ.சா.1 சுரேஷ் எதிரி சக்திவேலிடம் பேசிவிட்டு அந்த ரெக்காடை எங்களிடம் காண்பிப்பார். தர்மராஜ், அழகர்,தாசன், சுரேஷ், தினேஷ் மற்றொரு சுரேஷ் ஆகியோர்களுக்கு பணம் திரும்ப கிடைக்கவில்லை என்பதால் புகார் கொடுத்திருந்தார்கள் என்றால் சரிதான். அப்போது புகார் கொடுக்கும்போது என்னை அழைத்து சென்றார்களா என்றால் இல்லை. அ.சா.1 என் நண்பர் என்பதால் அவருக்கு அனுசரணையாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1வது எதிரி சக்திவேலை இந்த வழக்கில் வேண்டும் என்பதற்காகவும், 2 வது எதிரியை இவ்வழக்கிலிருந்து தப்பிக்க வைக்கவேண்டும் என்பதற்காகவும் ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (2 வது எதிரி தரப்பில்)**

2 வது எதிரியை தெரியும் என்ற விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு சொல்லவில்லைஎன்றாலும், தற்போது வழக்கிற்காக போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் முதன்முறையாக 2 வது எதிரியை தெரியும் என்று அடையாளம் காட்டி பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 சுரேஷிடம் எதிர்முனையில் பேசி நபர் கோவிந்தலெட்சுமியா, அல்லது வேறு பெண்மணியா என்பது எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் எனக்கு தெரியாது, 1வது எதிரி சக்திவேல் சொன்னதுதான். 1வது எதிரி 2 வது எதிரியை சம்பந்தப்படுத்தி தவறாக கூறியதை எதிர்முனையில் பேசியவர் யார் என்றே தெரியாமல் 2 வது எதிரியை சம்பந்தப்படுத்தி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் அ.சா.1 என்னிடம் சொன்னதுதான்.